
Hari's E-Books Collection
P.K.Hari
www.pkhari.net
www.vedarahasya.net
Copyrights reserved © 2001 By P.K.Hari

உ
சிவமயம்



**ஸ்ரீ மாத்ரே நம:**

**சிவாய நம:**

"சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினுமில்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவருமில்லை
புவனங் கடந்து அன்று பொன்னொளி மின்னும்
தவளச் சடைமுடித் தாமரையானே"

சிவாய நம: என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை என்ற சிறப்பு கொண்ட, மங்கள ரூபியானுதும், தோடுடைய செவி கொண்டு, விடையிற் அமர்ந்து வெண் மதி சூடிய காட்சி தருபவரும் ஆன சிவனது நூற்றி எட்டு ஷேத்திரங்களை தரிசிக்கும் பேறு கிடைக்குப் பெற்றேன். அத்தகைய சிவஷேத்திரங்களை பற்றிய சிறிய குறிப்புகளை அன்பர்க்கு பயன்படும்படியாக சேர்த்து இது வெளியிடப்படுகிறது. அன்பர்கள் வெளியூர் செல்லும் போது, அருகாமையில் உள்ள ஏதேனும் ஒன்றிரண்டு சிவ ஷேத்திரங்களை தரிசனம் செய்ய இச்சிறு குறிப்பேடு உதவியாக இருக்கும்.

இந்த ஷேத்ராடனத்தில் மூன்று காயா ரோகண ஷேத்ரங்கள் தரிசிக்கப்பட்டுள்ளன. ஸ்தூல உடம்போடு கூட, அன்பரை சிவன் தன்னுள் ஐக்யப்படுத்திக் கொண்ட ஷேத்ரங்கள் அவை. குடந்தை காரோணம், நாகை காரோணம், கச்சி காரோணம் என்ற மூன்றும் (கும்பகோணம், நாகப்பட்டினம், காஞ்சீபுரம்) சிறப்புள்ள தலங்கள். பஞ்ச சபைகள் தரிசிக்கப் பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| திருவாலங்காடு | - | ரத்னசபை |
| சிதம்பரம் | - | கனகசபை |
| மதுரை | - | வெள்ளியம்பலம் |
| திருநெல்வேலி | - | தாமிரசபை |
| திருக்குற்றாலம் | - | சித்திரசபை |

மற்றும் சப்தஸ்தானங்கள் தரிசிக்கப்பட்டன

| | | |
|---|---|---|
| திருவையாறு | திருக்கண்டியூர் | திருப்பழனம் |
| திருப்பூந்துருத்தி | திருச்சோற்றுத்துறை | தில்லைஸ்தானம் |
| திருவேதிகுடி | | |

மேலும் பஞ்சபூத தலங்களும் இதில் அமைந்துள்ளது சிறப்பாகும்.

| | | |
|---|---|---|
| காஞ்சிபுரம் | - | ப்ருத்வி-மண் |
| திருவானைகோவில் | - | நீர் |
| திருவண்ணாமலை | - | அக்னி |
| ஸ்ரீகாளஹஸ்தி | - | காற்று |
| சிதம்பரம் | - | ஆகாயம் |

இந்த ஷேத்ரங்கள் அனைத்தும் நாயன்மார்களால் பாடல் பெற்றவையாகும். பல ஷேத்ரங்களை ஒன்றுக்கு மேற்பட்ட நாயன்மார்கள் பாடி, போற்றிவைத்துள்ளனர். வாய்ப்பும், வசதியும் அமைகின்ற தருணம் முடிந்த ஷேத்ரங்களை தரிசனம் செய்து சிவனருள் பெற பிராத்திக்கின்றேன்.

45, அக்ரஹாரம் தெரு,
சிந்தாதிரிபேட்டை
சென்னை - 600 002
Ph. 852 7560

ஸ்ரீவித்யா உபாசகர்
ரசமணி கிருஷ்ணன

1. திருவொற்றியூர் - ஆதிபுரீஸ்வரர்
வடிவுடையம்மன

2. திருவேற்காடு - வேதபுரீஸ்வரர்
(வடவேதாரண்யம் வேற்கண்ணி
(கருமாரி அம்மன் கோவில் சிறப்பு)

3. திருமயிலை - கபாலீஸ்வரர்
கற்பகவல்லி
(உமாதேவி மயில் உருவில் பூஜை செய்த தலம்)

4. திருமுல்லைவாயில் - மாசிலாமணி
(ஆவடி - சென்னை) கொடியிடைநாயகி
(பகைவிரட்ட நந்தி திசை திரும்பி அமைந்துள்ளது)

5. மாடம்பாக்கம் - தேனுபுரீஸ்வரர்
(தாம்பரம்) தேனுகாம்பாள

6. காஞ்சிபுரம் - ஏகாம்பநாதர், காமாஷி
(வேதங்கள் மா உருவில் பூஜித்த தலம் ஆதி காமாஷி கோவில் சிறப்பு)

7. திருவாலங்காடு - அமிர்த தாண்டவர்
(அரக்கோணம் அருகில்) வண்டார் குழலி
(காளியுடன் சிவன் நிருத்த தாண்டவம் புரிந்த தலம்)

8. திருப்பாசூர் - பாசூரப்பன்
(திருவள்ளூர் அருகில்) பசுபதி நாயகி
(மூங்கில் அடியில் சிவன் தோன்றிய தலம்)

9. வேலூர் - ஜலகண்டேஸ்வரர்
(கோட்டை கோவில்) ஜகதாம்பிகை

10. கொல்லிமலை - அறப்பளீஸ்வரர்
(கொல்லிப்பாவை கோவில் சிறப்பு)

11. சேலம் - சுகவனேஸ்வரர்
சுகந்த குந்தளாம்பிகை

12. திருச்செங்காடு - அர்தநாரீஸ்வரர்
(மலைமீது கோவில்) பாகம் பிரியாள்

13. திருஈங்கோய்மலை மரகதாசலேஸ்வரர்
மரகதவல்லி
(குளித்தலை அருகே காவிரியின் மறுகரை - அகத்தியர் ஈ உருவில் வழிபட்ட தலம்)

14. கடம்பர்கோவில் - கடம்பவனநாதர்
(கடம்பந்துறை) முற்றிலாமுலையம்மை
(குளித்தலை அருகில்)

15. பேரூர் (கோவை) - பட்டீஸ்வரர்,
வடிவுடைநாயகி

16. வெள்ளியங்கிரி - வெள்ளியங்கிரிஸ்வரர்
நாகதேவி
(கோவை அருகில் - ஐந்து மலைகளை கடந்து அடைய வேண்டும், படிகள் கிடையாது )

17. திருச்சூர் (கேரளா) - வடக்குநாதர், பகவதி

18. குருவாயூர் (கேரளா) - மம்மியூரப்பன், பகவதி

19. வைக்கம்- வைக்கத்தப்பன்
(எர்ணாகுளம் அருகில்) பகவதி

20. திருவண்ணாமலை- அருணாசலேஸ்வரர்
(அக்னி தலம்) உண்ணாமுலையம்மை
(சிவனே மலையாக அமைந்திருப்பதாக ஐதீகம் கிரிவலம் சிறப்பு - கிரிவலத்தில் தரிசனம் செய்ய வேண்டியன - இந்திர லிங்கம் அக்னி லிங்கம் - நிர்ருதி லிங்கம் ஈசான்ய லிங்கம் - யம லிங்கம் - வாயுலிங்கம் வருண லிங்கம் - குபேரலிங்கம் - சூரிய லிங்கம் சந்திர லிங்கம்)

21. திருக்கழுகுன்றம் - வேதகிரீஸ்வரர்
பெண்ணின் நல்லாள்
(சங்கு தீர்த்த குளத்தில் 12 ஆண்டுக்கு ஒருமுறை சங்கு பிறக்கும் - மலை கோவில் - உ.வே. சாமிநாதய்யர் முக்தி தலம்)

22. திண்டிவனம் - தின்றிவனெஸ்வரர், பார்வதி

23. திருப்பாதிரிபுலியூர் - பாடலீச்வரர்
பெரியநாயகி
(நாவுக்கரசர் கற்றூணில் மிதந்து வந்து கரை சேர்ந்த தலம்)

24. சிதம்பரம்- சபாநாயகர், சிவகாமி
(கனக சபை நடன தரிசனம் பஞ்ச பூத தலங்களில் ஆகாயம்)

25. சீர்காழி - ப்ரம்மபுரீச்வரர்
திருநிலைநாயகி
தோணியப்பர், திரிபுரசுந்தரி, சட்டைநாதர் சன்னதி
(பிரமன் வழிபட்டது, ஞானசம்பந்தர் பிறந்த தலம் ஞானப்பால் அருந்திய தலம்)

26. வைத்தீஸ்வரர் கோவில் - வைத்யநாதர்
தையல்நாயகி
(முத்துக்குமரன் சன்னிதி நவக்ரகங்களுள் அங்காரகன் சன்னதி சிறப்பு)

27. மயிலாடுதுறை - மாயூரநாதர்
(மாயவரம்) அபயாம்பிகை
(அம்பாள் மயிலாகி இறைவனை பூஜித்த தலம், துலா ஸ்நானம், கட முழுக்கு சிறப்பு)

28. திருக்கடையூர் - அமர்தகடேச்வரர்
(திருக்கடவூர்) அபிராமி
(மார்கண்டருக்காக யமனை உதைத்த தலம், அபிராமி பட்டர் அந்தாதி அருளிய தலம்)

29. திருநள்ளார் - தர்பாரண்யேச்வரர்
(5Km- காரைக்கால்) போகமார்த்தபூண்முலையம்மை
(நவக்ரகங்களுள் சனி பகவான் சன்னதி சிறப்பு, நளன் வழிபட்டு கலி நீங்கிய தலம், நள தீர்த்தம், சூர்ய தீர்த்தம் சிறப்பு)

30. திருமணஞ்சேரி - அருள்வள்ளநாயகேச்வரர்
(6Km -குத்தாலம்) கோலயாழ்மென்மைமொழியம்மை
(கல்யாண கோலத்தில் விநாயகருடன் அமைந்துள்ளது சிறப்பு - திருமண தோஷங்கள் விலகும் தலம்)

31. திருமீயச்சூர் - மேகநாதேச்வரர்
(2Km-பேரளம்) சௌந்தர நாயகி
(சூரியன் வழிபட்ட தலம்)

32. ஸ்ரீவாஞ்சியம் - வாஞ்சிலிங்கேஸ்வரர்
(9Km-நன்னிலம்) மங்கள நாயகி
(யமனுக்கு தனி சன்னிதி, யம பயம் அகலும் பிள்ளையில்லா குறை தீரும்)

33. திருவிழிமிழலை - நேத்ரார்ப்பணேஸ்வரர்
(9Km-பூந்தோட்டம்) சுந்தரகுசாம்பிகை
(திருமால் தன் கண்மலரால் பூஜை செய்து சக்கரம் பெற்ற தலம், அப்பர், சம்மந்தருக்கு சிவபெருமான் படிக்காசு அளித்த தலம்)

34. திருவாரூர் - வன்மீகநாதர் - தியாகராஜர்
நீலோற்பலாம்பாள் - கமலாம்பிகை
(சங்கீதமும்மூர்த்திகள் அவதார தலம், திருவாரூரில் பிறக்க முக்தி, கமலாம்பிகை யோக முத்தரையில் அமர்ந்து, காஷி தரும் தலம்)

35. திருத்துறைபூண்டி - பவஔஷதேஸ்வரர்
(27Km-திருவாரூர்) ப்ரஹன்னாயகி

36. வேதாரண்யம் - மறைக்காட்டீசர்
(திருமறைக்காடு) யாழைபழித்தமொழியம்மை
(மூடப்பட்ட திருக்கோவில் கதவை, வேதங்களால் அப்பரும் சம்மந்தரும் பதிகம் பாடி திறந்து வைத்த தலம்)

37. அகஸ்தியன் பள்ளி - அகஸ்தீஸ்வரர்
(2Km-வேதாரண்யம்) பாகம்பிரியாநாயகி

(அகஸ்தியருக்கு சிவன் கல்யாண கோலம் காஷியருளிய தலம்)

38. சிக்கல் - நவநீதேஸ்வரர்
(19Km-திருவாரூர்) சக்தியாயுதாஷி
(முருகனுக்கு வேல் தந்த தலம், சிங்காரவேலன் சன்னிதி சிறப்பு)

39. நாகப்பட்டிணம் - காயாரோகணேஸ்வரர்
நீலாயதாஷி
(புண்டரீகமுனிவரை உடம்போடு பரமபதம் சேர்த்த தலம், நாகை காரோணம்)

40. திருவிடைமருதூர் - மகாலிங்கேஸ்வரர்
(7Km-கும்பகோணம்) ப்ருஹத்சுந்தர குசாம்பாள்
(பட்டினத்தார், பத்ரகிரியார் வழிபட்ட தலம் வரகுண பாண்டியன் ப்ரம்மஹத்திதோஷம் விலகிய தலம்)

41. திருவிசநல்லூர் - சிவயோகிநாதர்
சௌந்தர நாயகி
(ஜடா முடி அடையாளம் லிங்கத்தில் காணலாம், ஸ்ரீதர ஐயாவாள் முக்தி தலம், கார்த்திகை அமாவாசை சிறப்பு)

42. திருந்துதேவன்குடி- கற்கடேச்வரர்
(1Km-திருவிசநல்லூர்) அருமருந்தாமை
(நண்டும், குதிரையும் பூஜை செய்து முக்தி அடைந்த தலம்)

43. கும்பகோணம் - கும்பேஸ்வரர்,
மங்களாம்பிகை
(அமிர்த கும்பத்தை லிங்கமாக தேவர் பூஜித்தது)
சூரியன் வழிபட்டு சாபம் நீங்கியது
நாகேஸ்வரர் பெரியநாயகி
குடந்தை காரோணம் - காசி விஸ்வநாதர்
விசாலாஷி
(நவநதிகள் - கங்கை, யமுனா, நர்மதா, சரஸ்வதி, காவேரி, கோதாவரி, துங்கபத்ரா, கிருஷ்ணா, சரயூ இவை மகாமக குளத்தை சுற்றி 16 லிங்க ஸ்தாபனம் செய்து வழிபட்டு, சிவனுடன் ஐக்யமான தலம், மகாமக குளம் சிறப்பு)

44. திருபுவனம் - கம்பஹரேஸ்வரர்
(8Km-கும்பகோணம்) பெரிய நாயகி
(சரபேஸ்வரர் சன்னிதி சிறப்பு)

45. நல்லூர் - கல்யாண சுந்தரர்
(12Km-கும்பகோணம்) திரிபுரசுந்தரி
(மாடக்கோவில், அப்பருக்கு சிவன் திருவடி தந்த தலம், சடாரி சேவை சிறப்பு)

46. திருப்பாலைத்துறை - பாலைவனநாதர்
(பாபநாசம)(15Km- கும்பகோணம்) தவளவெண்ணகையம்மை
(நாயக்கர் காலத்து மிகப்பெரிய நெல்குதிர் சிறப்பு)

47. திருநாகேஸ்வரம் - கண்பகாரண்யேச்வரர்
(5Km-கும்பகோணம்) கிரிகுசாம்பாள்
(நவக்ரங்களுள் ராகு தலம், ராகு சன்னிதி சிறப்பு)

48. திருமங்கலகுடி - ப்ராணவரதேச்வரர்
(4Km-ஆடுதுறை) மங்களநாயகி
(காளி வழிபட்ட தலம்)

49. திருக்கருகாவூர் - முல்லைவனநாதர்
(18Km-கும்பகோணம்) கர்பரஷாம்பிகை
(பெண்களுக்கு கர்ப சம்மந்தமான தோஷங்கள் நீக்கும் தலம்)

50. திருவலஞ்சுழி - கபர்த்தீஸ்வரர்
(6Km-கும்பகோணம்) ப்ரஹன்னாயகி
(இந்திரனால் அமைக்கபட்ட ஸ்வேதவினாயகர் சன்னிதி சிறப்பு)

51. திருஆலங்குடி - காசியாரண்யேச்வரர்
(17Km-கும்பகோணம்) ஏலவார் குழலியம்மை
(நவக்ரகங்களுள் குரு பரிகார தலம் தஷிணாமூர்த்தி சன்னிதி சிறப்பு)

52. பட்டீஸ்வரம் - தேனுபுரீஸ்வரர்
(8Km-கும்பகோணம்) பல்வளைநாயகி
(துர்கை சன்னிதி சிறப்பு)

53. திருநரையூர் - சித்தநாதர்
(சித்தீஸ்வரம்- சௌந்தரநாயகி
8Km கும்பகோணம்)
(மஹாலஷ்மி பிறந்த தலம், கோர சித்தர் சன்னிதி சிறப்பு)

54. கோனேரிராஜபுரம் - உமா மஹேஸ்வரர்
(திருநல்லம் அங்கவள நாயகி
18Km-கும்பகேணம்)
(நடராஜர் சனனதி சிறப்பு)

55. திருநீலக்குடி - மனோயக்ஞநாதர்
(14Km-கும்பகோணம்) பக்தாபீஷ்ட ப்ரதாயினீ
அநுபமஸ்தனீ
(பஞ்சமுகவில்வம் ஸ்தலவ்ருஷம், எண்ணை காப்பு லிங்கத்திலேயே இறங்விடும் சிறப்பு)

56. ஆடுதுறை - ஆபத்சகாயேஸ்வரர்
(தென்குரங்காடுதுறை) பவளக்கொடியம்மை
(11Km-கும்பகோணம்)
(ம்ருகண்டு மகரிஷி பூஜை செய்த தலம்)

57. திருவோடிகாவல் - திருகோடீஸ்வரர்
(8Km-ஆடுதுறை) திரிபுரசுந்தரி
(மூன்று கோடி முனிவர்கள் பூஜித்த தலம்)

58. கஞ்சனூர் - அக்னீஸ்வரர்
(6Km-ஆடுதுறை) கற்பகம்மாள்
(நவக்ரங்களுள் சுக்ரன் தலம்)

59. திருப்பணந்தாள் - அருணஜடேஸ்வரர்
(தாடகேச்வரம் பெரியநாயகி
9Km-ஆடுதுறை)
(பக்தைக்காக தலைசாய்த்த சிவனை குங்கிலிய நாயனார் நிமிர்த்திய தலம், ஆண்ட விநாயகர் சன்னிதி சிறப்பு)

60. ஐவர்பாடி (ஐயாவாடி) - அகஸ்தீஸ்வரர்
(8Km-கும்பகோணம்) தர்மஸம்வர்தனீ
(உக்ர ப்ரத்யங்கிரா சன்னிதி சிறப்பு)

61. திருப்பந்துறை - ப்ரணவேச்வரர்
(12Km-கும்பகோணம்) மங்களாம்பிகை
(சிவ சாபத்தால் ஊமையான முருகன் சாபம் நீங்கிய தலம்)

62. கொட்டையூர் - கோடீஸ்வரர்
(கோட்டீஸ்வரம் பந்தாடுநாயகி
3Km -கும்பகோணம்)
(லிங்கத்தில் கோடி முத்துக்கள், நவக்ரகங்கள் வாகனங்களுடன் அமர்ந்திருப்பது, கோடி விநாயகர் சன்னிதி சிறப்பு)

63. இன்னம்பூர் - அஷரபுரீஸ்வரர்
(5Km-கும்பகோணம்) சுகந்தகுந்தளாம்பாள்
(பக்தனுக்காக, அரசனிடம் கணக்கு சொன்னவர், அகஸ்தியர் வழிபட்ட தலம்)

64. திருப்புறம்பியம் - சாஷிநாதர்
(8Km-கும்பகோணம்) இஷூரஸ்வாணி
(பக்த வணிகன் மனைவி இறந்தற்கு அரசனிடம் சாஷி சொன்னவர். பிரளயம் காத்த விநாயகர் சன்னிதி சிறப்பு விநாயக சதுர்த்தி அன்று செய்யப்படும் தேன் அபிஷேகம் முழுவதும் திருஉருவத்திலேயே இறங்கிவிடுவது சிறப்பு)

65. திருவைகாவூர் - வில்வனேஸ்வரர்
(15Km-கும்பகோணம்) சர்வஜனரஷகி
(யமனுடன் போர்புரிய நந்தி திரும்பி அமைந்துள்ளது, துவார பாலகர்கள் இல்லை. சிவராத்ரி பூஜை சிறப்பு)

66. திருசக்திமுற்றம் - சக்திவனேஸ்வரர்
(6Km-கும்பகோணம்) தழுவியநாயகி
(உமா தவம் செய்து ஈசனை அடைய முற்படுகையில் சோதனை செய்ய ஈசன் அக்னி ரூபமாக காஷிதருகிறார், உமையும் தயங்காமல் அக்னிரூபத்தினை தழுவிக் கொள்ள, ஈசன் சுய உருவத்தினை காண்பித்து மணம் புரிந்த தலம்)

67. ஆவூர் - பசுபதீஸ்வரர்
(பசுபதீஸ்வரம் பங்கஜவல்லி
10Km-கும்பகோணம்)

(முருகன் வில் அம்பு கொண்டு அமைந்திருப்பது சிறப்பு, புஷ்கரிணியில் தோன்றிய ஐந்து பைரவ விக்ரகங்கள் தரிசிக்க சிறப்பு)

68. தாராசுரம் - ஐராவதேஸ்வரர்
(3Km-கும்பகோணம்) தெய்வநாயகி
(ரத அமைப்பு கொண்ட மாடகோவில் சித்திரவேலைப் பாடுகள் மிக சிறப்பானவை ஐராவதம் பூஜை செய்த தலம்)

69. வடகுரங்காடுதுறை- தயாநிதேஸ்வரர்
(18Km-கும்பகோணம்) ஜடாமகுட நாயகி
(உளிபடாத கல்நடராஜ விக்ரகம் சிறப்பு வாலி பூஜித்த தலம்)

70. திருப்பூந்துருத்தி - புஷ்பவனேஸ்வரர்
(3Km-திருவையாறு) சௌந்தரநாயகி
(வீணை தஷிணாமூர்த்தி சன்னதி சிறப்பு நாராயண தீர்த்தர் முக்தி தலம்)

71. சிவபுரம் - சிவபுரநாதர்
(5Km-கும்பகோணம்) சிங்காரவல்லி
(வராக சாபம் பெற்ற திருமால் பூஜை செய்து சாபம் நீங்கிய தலம், நடராஜர் சிலை சிறப்பு பெற்றது)

72. சாக்கோட்டை - அமிர்தகலேச்வரர்
(3Km-கும்பகோணம்) அமிர்தவல்லி
(அமிர்த கலசம் பெற்ற தேவர்கள் பூஜை செய்த தலம்)

73. அடிகார்புத்தூர் - ஸ்வர்ணபுரீச்வரர்
(7Km-கும்பகோணம்) சௌந்தரநாயகி
(சங்கு, சக்ரத்துடன் கூடிய முருகன் சன்னதி சிறப்பு)

74. குடவாசல் - கோணேசர்
(9Km-கும்பகோணம்) பெரியநாயகி
(கைலாசமலைக்கு இணையான மாடக்கோவில் கருடன் பூஜித்த தலம், குடத்திலிருந்து ஈசன் தோன்றிய தலம்)

75. ஆண்டாங்கோவில் - ஸ்வர்ணபுரீச்வரர்
(16Km-கும்பகோணம்) சிவசேகரீ
(காரை சித்தர் முக்தி தலம்)

76. திருவையாறு - பஞ்சநதிஸ்வரர்
(12Km-தஞ்சாவூர்) தர்மஸம்வர்தனீ
(மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜர் வாழ்ந்து சித்தி அடைந்த தலம் ஜப்யேச மண்டபத்தில் மந்திர ஜபம் செய்ய சிறப்பு)

77. திருக்கண்டியூர் - பிரம்மசிரகண்டீஸ்வரர்
(9Km-தஞ்சாவூர்) மங்கள நாயகி
(பிரமன் சிரம்கொய்த தலம், பிரம்மா விஷ்ணு, சிவன், மூவருக்கும் கோவில் அமைந்துள்ளது சிறப்பு)

78. தஞ்சாவூர் - ப்ருஹதீஸ்வரர்
பெரியநாயகி
(கோட்டையின் உள்ளே அமைந்த கோவில் ப்ரும்மாண்டமான ஸ்வாமி திருஉருவம், நந்தியும், கோவில் அமைப்பும் சிறப்பு)

79. திருஆலம்பொழில் - ஆத்மநாதேஸ்வரர்
(5Km-திருவையாறு) ஞானாம்பிகை
(அஷ்டவசுக்கள் பூஜித்த தலம்)

80. திருவேதிகுடி - வேதபுரிஸ்வரர்
(12Km-தஞ்சாவூர்) மங்கையர்கரசி
(வேதங்கள் வழிபட்ட தலம், செவி சாய்த்த வினாயகர் சன்னதி சிறப்பு)

81. திருச்சோற்றுத்துறை - ஔதனவனேச்வரர்
(3Km-திருவையாறு) அன்னபூரணி
(வேதியர்களுக்கு குறைவில்லாமல் அன்னம் அளித்த தலம்)

82. தில்லைஸ்தானம் - க்ருதபுரிஸ்வரர்
(2Km-திருவையாறு) பாலாம்பிகை
(சரஸ்வதி வழிபட்ட தலம்)

83. திருப்பழனம் - ஆபத்சகாயேஸ்வரர்

(3Km-திருவையாறு) ப்ரஹன்நாயகி
(திக்பாலகர் பூஜித்த தலம்)

84. பசுபதிகோவில் - ஆலந்தரித்தஈசர்
(திருப்புள்ளமங்கை அல்லியங்கோதை
18Km-தஞ்சாவூர்)
(ஆலமுண்ட சிவனை தேவர்கள் பறவை உருவங்கொண்டு தரிசித்த தலம்)

85. சக்கராபள்ளி - சக்ரவாகேஸ்வரர்
(20Km-தஞ்சாவூர்) தேவநாயகி

86. திருவானைக்கோவில் - ஜம்புகேஸ்வரர்
திருஆனைக்கா அகிலாண்டேஸ்வரி
(5Km-திருச்சி)
(ஸ்வாமி கருவறையில் நீர் ஊறும் பஞ்சபூத தலங்களில் நீர். நண்பகலில் தினசரி அம்பாள், ஸ்வாமி சன்னிதி சென்று பூஜை செய்து திரும்புவது சிறப்பு. ஸ்வாமியே சித்தராய் வந்து திருநீற்றை பொன்னாக்கி அளித்து கட்டப்பட்ட திருநீறிட்டான் மதில் சிறப்பு. சிவனை வழிப்பட்ட சிலந்தி மறுபிறவியல் கோசெங்கட்சோழ அரசனாக பிறந்து, சிவனுக்கு பல கோவில்களை கட்டுவித்து சிறப்புற்ற தலம்)

87. திருச்சிராபள்ளி - மாத்ருபூதேஸ்வரர்
சுகந்தகுந்தளாம்பிகை
(தனது பக்தைக்கு அவளது அன்னை உருவில் சிவன் வந்திருந்து மகப்பேறு நடத்திய தலம், மலைக்கோவில் திரிசிரன் வழிபட்ட தலம், உச்சிப்பிள்ளையார் கோவில் சிறப்பு)

88. திருகோகர்ணம் - பகுளனேஸ்வரர்
(2Km-புதுக்கோட்டை) மங்களாம்பிகை

89. இராமேஸ்வரம் - இராமநாதர்
பர்வதவந்தினி
விஸ்வநாதர், விசாலாஷி
(சீதை மணல் கொண்டு லிங்கம் அமைத்து பூஜை செய்த தலம், ஆஞ்சநேயர் கொண்டு வந்த லிங்கம் காசி விஸ்வநாதர் என இராமநாதர் சன்னதிக்கு முன்பாக அமைந்துள்ளது. பித்ரு சாப விமோசன தலம்)

90. மதுரை (திருஆலவாய்) - சோமசுந்தரேஸ்வரர்
மீனாஷி
(64 திருவிளையாடல்கள் புரிந்த தலம். பஞ்ச சபைகளில் கால் மாறி நடம் புரிந்த வெள்ளியம்பலம் பெற்றறாமரை குளம் சிறப்பு, முக்குறுணி வினாயகர் சிறப்பு)

91. திருப்பரங்குன்றம் - பரங்கிரிநாதர்
ஆவுடைநாயகி
(சிபிச்சக்கரவர்த்திக்காக சிவன் தானம் வாங்கச் சென்ற தலம். முருகனின் அறுபடை வீடுகளுள் முதலாவதான தேவயானை திருமணம் நடைபெற்ற தலம்)

92. திருநெல்வேலி - நெல்லையப்பர்
காந்திமதி
(பஞ்ச சபைகளுள் தாமிர சபை, காய வைத்த நெல் நனையாமல் மழையிலிருந்து காப்பாற்ற வேலி கட்டி, பக்தனுக்கு அருள் புரிந்த தலம்)

93. திருக்குற்றாலம் - குறும்பலாஈசர்
குழல்வாய்மொழியம்மை
(பஞ்ச சபைகளில் சித்திர சபை, மலை அருவி சிறப்பு, அகஸ்தியரால் ஸ்தாபித்த மகாமேரு தரிசனம் சிற்ப்பு)

94. தென்காசி - விஸ்வநாதர்
(8Km-குற்றாலம்) விசாலாஷி
(காசிக்கு இணையான தலம்)

95. சங்கரன் கோவில் - சங்கரலிங்கம், கோமதி
(சங்கரநாராயணர் சிவன் ஒருபாதியும் விஷ்ணு ஒருபாதியாகவும் ஒரே வடிவில் அமைந்துள்ள சன்னதி சிறப்பு)

96. கரிவலம்வந்த நல்லூர் - பால்வண்ணநாதர்
(12Km-சங்கரன் கோவில்) வேதநாயகி
(அகஸ்தியர் ஸ்தாபிதம் செய்துள்ள மகாமேரு சன்னதி சிறப்பு. தன் பக்தனான பாண்டிய மன்னனுக்கு வாரிசு இல்லாமையால், சிவனே சிரார்த்தம் செய்து வருவதாக ஐதீகம்)

(97 முதல் நெல்லை மாவட்டம்)

97. பாபநாசம் - பாவவிநாசர்
(திருநெல்வேலி) லோக நாயகி
(மலை அருவி சிறப்பு)

98. சேரன்மாதேவி - அம்மநாதர்
(திருநெல்வேலி) ஆவுடைநாயகி

99. கோடகநல்லூர் - கைலாசபதி, சிவகாமி

100. கீழதிருவேங்கடபுரம் - கோதபரமேஸ்வரர்
(சங்காணி) சிவகாமி

101. சேந்தபூங்மங்கலம்- கைலாசநாதர்
அழகியபொன்னம்மை

102. தென்திருப்பேரை - கைலாசநாதர், சிவகாமி

103. ஸ்ரீவைகுண்டம் - கைலாசநாதர், சிவகாமி
கைலாசநாதர், விசாலாஷி

104. முறப்பநாடு - கைலாசநாதர், சிவகாமி

105. ராஜகிரி - கைலாசநாதர்
(கோவில்புதையுண்டது) சிவகாமி

(நெ 97 முதல் 105 வரையிலான தலங்கள் திருநெல்வேலியை சுற்றி, தாமிரபரணி ஆற்றின் கரை ஓரங்களில் அமைந்துள்ளன. உரோமக ரிஷிஸ்தாபனம் செய்து, பூஜை செய்த தலங்கள். நவ கைலாசம் என்று வழங்கப்படுகிறது.)

106. கருங்குளம் - மார்தாண்டேச்வரர்
(திருநெல்வேலி) குலசேகரநாயகி
(நவக்ரகங்கள் தம்பதிகளாக அமைந்து இருப்பது சிறப்பு)

107. சுசீந்தரம்- தாணுமாலயன்
(இந்த்ரன் சாபம் தீர்ந்த தலம், சிவன், விஷ்ணு, பிரம்மா மூவரும் ஒன்றாக இணைந்த மூர்த்தம். 18 அடி உயர ஆஞ்சநேயர் சன்னதி சிறப்பு. சங்கீத தூண்கள், நவக்ரக மண்டபம், நடராஜர் விக்ரகம் சிறப்பு. அத்திரி முனிவருக்கும், மனைவி அனசூயாவிற்கும் மும்மூர்த்திகள் லிங்கவடிவில் காஷி தந்த தலம்.)

108. ஸ்ரீகாளஹஸ்தி - காளத்தியப்பர்
(திருப்பதி அருகில்) ஞான பூங்கோதை
(கண்ணப்பர் முக்தி தலம்)

109. ஸ்ரீசைலம் - ஸ்ரீசைலநாதர்
(மல்லிகார்ஜுனம்) ப்ரமராம்பிகை
(ஆதிசங்கரர் தவம் செய்த தலம், நந்தி தேவர் மலையாக அமைந்துள்ளதாக ஐதீகம், சாஷி கணபதி சன்னதி சிறப்பு)

110. மஹாகாளம் - மஹாகாளேஸ்வரர்

111. மஹாநந்தி - நந்தீஸ்வரர்

112. கோகர்ணம் - மஹாபலநாதர்
(கர்நாடகா) கோகர்ணநாயகி
கோகர்ணேஸ்வரர், தாம்ரகௌரீ
(காசிக்கு இணையான கடற்கரை ஷேத்ரம் கயிலையிலிருந்து இராவணன் கொண்டு வந்த லிங்கத்தை, வினாயகர் ஸ்தாபித்த தலம், பிதுர் காரியங்க்ள செய்ய உகந்த ஷேத்ரம்)

113. தலக்காடு - பாதாளலிங்கேஸ்வரர்
(மைசூர் அருகில்) வைத்யநாதேஸ்வரர்
மனோன்மணி
(பக்தையின் சாபத்தினால் ஊர் முழுதும் மணல் மூடி கிடப்பது சிறப்பு)

114. சோமநாத்பூர் - சோமபுரிஸ்வரர்
(சித்திர வேலைபாடு சிறப்பு)

115. ஹலிபேடு - ஹௌளய்சலேஸ்வரர்
(கட்டிட கலை, சித்திர வேலை, மிக உன்னதம்)

116. தலக்காவேரி - அகஸ்தீஸ்வரர்
(காவிரி உற்பத்தி தலம், சப்த ரிஷிகள் தவம் செய்த தலம்)

117. பாகமண்டலா - பாகமண்டலேச்வரர்
(மெர்காரா)

(திரிவேணி சங்கமம் - காவேரி, சுஜ்யோதி, கன்னிகே என்ற மூன்று நதிகள் சங்கமம்)

118. நஞ்சன்கூடு (மைசூர்) - நஞ்சுண்டேஸ்வரர்

119. முருடீஸ்வரம் - முருடீஸ்வரர்
(கடற்கரையில் அமைந்துள்ள கோவில்)

120. உடுப்பி - சந்த்மௌளீஸ்வரர்

121. சுப்ரமண்யா (கர்நாடகா) - குக்கேலிங்கேசர்

122. கேதார்நாத் - கேதாரேஸ்வரர்
(திருப்பருபதம்) கேதாரகௌரீ
(6 மாதம் மனிதர்களாலும், 6 மாதம் தேவர்களாலும் பூஜை நடைபெறும் தலம்)

123. கௌரீகுண்ட் - அருண்மன்னேச்வரர்
(அநேகதங்காபதம்) மனோன்மணி
(வெண்ணீர் ஊற்று சிறப்பு)

124. குப்தகாசி - விஸ்வநாதர், விசாலாஷி

125. ரிஷிகேஷ் - த்ரயம்பகேச்வரர், பார்வதி

126. ஜோஷிமட் - கௌரீசங்கர், பார்வதி

"புண்ணியம் செய்வார்க்கு பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை
நண்ணறியாமல் நழுவுகின்றாரே"

"அறிவார் பராசக்தி ஆனந்தம் என்பார்
அறிவார் அருவமும் உருவமும் அவளாம் என்பார்
அறிவார் கருமம் அவள் இச்சை என்பார்
அறிவார் பரனும் அவளிடந்தானே"


Download from www.pkhari.cjb.net




Download from www.pkhari.cjb.net